தினமலர்

# பாலூட்டும் அன்பிலே அன்னை நீயே! பழகும் உறவிலே பிள்ளை நீயே!



கோமாதா

**ப**சுக்கள் நோய் நொடியின்றி ஆரோக்கியமாக வாழ அருளும் கோபிநாதசுவாமி, திண்டுக்கல் அருகிலுள்ள ரெட்டியார்சத்திரத்தில் அருளுகிறார். மாட்டுப்பொங்கல் தினமான இன்று இவரது தரிசனம் பெறுவோம்.



கோப்பம்மாள்

**தல வரலாறு:** வடநாட்டில் பசுக்களை மேய்த்து வந்த ஒரு தாயும், மகனும் பசுக்களுடன் இங்கு வந்தனர். ஒருசமயம், இங்கு பஞ்சம் ஏற்படவே பல பசுக்கள் மடிந்தன. பசுக்களின் மீது அன்பு கொண்ட அந்த பசுமேய்ப்போன், பசுக்களின் உயிரை எடுப்பதற்குப் பதிலாக, தன் உயிரை எடுத்துக்கொள்ளும்படி கிருஷ்ணரிடம் பிரார்த்தித்தான். பஞ்சம் நீங்கியது. பசுக்களை காப்பாற்றிய இறைவனுக்கு நன்றி செலுத்தும்விதமாக, தான் வேண்டியபடி உயிரை விட்டான். மகனை இழந்த தாயும் உயிர் விட்டாள்.

இப்பகுதியில் வசித்த பக்தர் ஒருவர், பசுக்களைக் காக்க ஆயர்பாடியிலிருந்து கிருஷ்ணரும், யசோதையுமே இங்கு வந்து உயிரைத் தியாகம் செய்ததாகக் கருதி அவர்களை மானசீகமாக வணங்கி வந்தார். ஒரு சமயம் அவரது கனவில் தோன்றிய கிருஷ்ணர், இம்மலையைச் சுட்டிக் காட்டி அவ்விடத்தில் அந்த தாய்க்கும், மகனுக்கும் கோயில் எழுப்பும்படி கூறினார். அதன்படி பக்தர் அவர்களுக்கு சிலை வடித்தார். சுவாமிக்கு கோபிநாதர் என்றும், அவரது தாயாருக்கு கோப்பம்மாள் என்றும் பெயர் சூட்டினார்.

**பிரார்த்தனை தலம்:** பசுக்களுக்கான பிரார்த்தனை தலமாக இக்கோயில் திகழ்கிறது. பசுக்கள் கருத்தரிக்கவும், அவை நோயின்றி வாழவும், அதிக பால் சுரக்கவும் விவசாயிகள் இங்கு வேண்டிக் கொள்கிறார்கள். வேண்டுதல் நிறைவேறியதும் அப்பசுக்கள் முதன்முதலில் சுரக்கும் பாலைக் கொண்டு வந்து சுவாமிக்கு அபிஷேகம் செய்து, பால் சாதம் படைத்து, துளசி மாலை அணிவித்து நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர். பசுக்களின் உருவ பொம்மையும் செய்து வைப்பதுண்டு. சுவாமிக்கு அபிஷேகம் செய்த தீர்த்தத்தையும், இம்மலையில் விளையும் தர்ப்பைப்புல்லையும் பசுக்களுக்குக் கொடுத்தால், அவை நோயின்றி வாழும் என்கிறார்கள்.

**பொங்கல் விசேஷம்:** தைப் பொங்கல், மாட்டுப்பொங்கல் நாட்களில் சுவாமிக்கு பால், தயிர், வெண்ணெய், நெய் அபிஷேகம் நடக்கிறது. பசு வளர்ப்போர், மாட்டுப் பொங்கல் தினத்தன்று பசு முன்பாக நின்று, ''கோபிநாத சுவாமி அருளால் பட்டி (பசு) பெருக! பால் பானை பொங்க!'' என்று சொல்லி பசுவைச் சுற்றி வந்து வழிபடும் வழக்கம் இருக்கிறது.

## பசுக்களின் தெய்வம்

**தாய்க்கு முதல் பூஜை:** 620 படிக்கட்டுகளுடன் அமைந்த மலைக்கோயில் இது. புல்லாங்குழல் வாசித்தபடி கோபிநாதர் நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். அருகில் கன்றுக்கு பால் கொடுக்கும் பசுவின் சிலை இருக்கிறது. கோபிநாதருக்கு நடக்கும் மூன்று கால பூஜையின்போதும் சேகண்டி ஒலித்து, சங்கு முழக்கும் வழக்கம் உள்ளது. சங்கு, மகாலட்சுமியின் அம்சம் என்பதாலும், சுவாமியின் ஆயுதங்களில் ஒன்று என்பதாலும் இவ்வாறு செய்கின்றனர். சன்னதி முன் மண்டபத்தில் கோப்பம்மாள் காட்சி தருகிறார். பிள்ளையை விட தாய்க்கே முக்கியத்துவம் தர வேண்டுமென்பதன் அடிப்படையில், இவரை பூஜித்தபின்பே கோபிநாதருக்கு பூஜை செய்கின்றனர். தாயும், பிள்ளையும் காட்சி தரும் தலம் என்பதால் குழந்தை பாக்கியம் கிடைக்கவும், பிள்ளைகள் பெற்றோர் மீது பாசத்துடன் இருக்கவும், பெண்கள் தங்கள் புடவையின் ஒரு பகுதியைக் கிழித்து, தொட்டில் கட்டி வேண்டிக்கொள்கிறார்கள். மலையடிவாரத்தில் கருடாழ்வார், ஆஞ்சநேயருக்கு சன்னதிகள் உள்ளன.

இங்கு கிருஷ்ண ஜெயந்தி விழா 3 நாட்கள் நடக்கிறது. இவ்விழாவின்போது மட்டும் உற்சவர் கிருஷ்ணர் மலையிலிருந்து புறப்பாடாகி, வீதியுலா சென்று, நான்காம் நாள் கோயிலுக்குத் திரும்புகிறார். சனிக்கிழமைகளில் கூட்டம் அதிகமாக இருக்கும்.

**இருப்பிடம்:** திண்டுக்கல்லில் இருந்து 18 கி.மீ., துாரத்திலுள்ள ரெட்டியார்சத்திரம் சென்று, அங்கிருந்து 5 கி.மீ., சென்றால் கோயிலை அடையலாம். ரெட்டியார்சத்திரத்தில் இருந்து பஸ், ஆட்டோ வசதி குறைவு. சனிக்கிழமைகளில் திண்டுக்கல்லில் இருந்து கோயில் வரை ஸ்பெஷல் பஸ்கள் செல்கிறது.

**திறக்கும் நேரம்:** காலை 8- மாலை 5 மணி.

**போன்:** 0451- 2554 324, 2554 241, 98420 12922.





ரெட்டியார்சத்திரம் கோபிநாதசுவாமி கோயில்





கோபிநாதர்

## மாட்டுப்பொங்கல் இடுவது ஏன்

**வா**யில்லா ஜீவன்களில் மனித சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து நிற்பது பசு என்றால் அது மிகையில்லை. காலையில் எழுந்ததும் 'பால் வந்து விட்டதா?' என்பது தான் நம் முதல் கேள்வியாக இருக்கிறது. அன்போடு வாஞ்சையாக ''அம்மா'' என்று பசு அழைக்கிறது. ஆனால், உண்மையில் நம் எல்லோருக்கும் பசுவே தாயாக இருந்து பால் தந்து காக்கிறது. பெற்ற தாய் கூட இரண்டு வயது வரை தான் பால் தருவாள். ஆனால், எத்தனை வயதானாலும் பசுவின் பால், மோர், தயிர், நெய் நம் உணவில் சேர்த்துக் கொள்ள மறப்பதில்லை. வயதாகி சாப்பிட முடியாத நிலை வரும் போது, பசும்பால் மட்டுமே நமக்கு கைகொடுக்கிறது. உயிர் வெளியேறத் துடிக்கும் போது, குழந்தைகளெல்லாம் வாயில் பால் ஊற்றுகிறார்கள். இறந்த பிறகு சமாதியிலும் பால் ஊற்றுகிறார்கள். இப்படி பிறப்பு முதல் இறப்புக்குப் பிறகும் நம்மை வளர்த்து ஆளாக்கிய தாயான பசுவுக்கு நன்றிக்கடன் செலுத்தும் நோக்கத்திலேயே மாட்டுப்பொங்கல் இடப்படுகிறது. அதனால் தான் அதனை ''கோமாதா'' என்று அழைக்கிறோம்.





## பசுவுக்காக வாழ்ந்த சித்தர்

**தி**ருவாவடுதுறைக்குத் தெற்கே உள்ள சாத்தனுார் என்னும் ஊரில் மூலன் என்னும் இடையன் வாழ்ந்து வந்தான். தான் வளர்த்து வந்த பசுக்கள் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்தான். பசுக்களும் மூலன் மீது தன் அன்பைப் பொழிந்தன. ஒருநாள் காட்டில் மேய்ச்சலுக்கு சென்றபோது, ஒரு பாம்பு மூலனைத் தீண்டியது. அவன் இறந்து விட்டான். மூலனை விட்டுப் பிரிய மனமில்லாத பசுக்களின் கண்களில் கண்ணீர் பெருகியது. அவனைச் சுற்றிச் சுற்றி வந்து கதறி நின்றன. வான் வழியே சென்று கொண்டிருந்த சிவயோகியான சித்தர் ஒருவர் இக்காட்சியைக் கண்டு பசுக்கள் மீது இரக்கம் கொண்டார். பசுக்களின் கண்ணீரைத் துடைக்க எண்ணம் கொண்டார். 'பரகாயப்பிரவேசம்' என்னும் கூடுவிட்டுக் கூடுபாயும் முறையில் மூலனின் உடம்பில் புகுந்தார். அதுவரை மூலனாக இருந்த அந்த உடல், சித்தரின் புனித சேர்க்கையால்''திருமூலர்' என்ற பெயர் பெற்றது. அவர் புகழ் பெற்ற சித்தர் ஆனார். தன் மீது அன்புகாட்டிய மூலன் உயிர்த்தெழுந்ததைக் கண்ட பசுக்கள் மகிழ்ச்சியில் திளைத்தன. காலையிலிருந்து பசும்புல் உண்ணாமல் வாடி நின்ற பசுக்கூட்டங்களை திருமூலர் நீர் அருந்தச் செய்து, வயிறார மேயச் செய்து ஊர்போய் சேர்ந்தார். இவர் எழுதிய பாடல்கள் 'திருமந்திரம்' என்று போற்றப்படுகிறது.

## பசுக்குலத்திற்கே பெருமை

**அ**ப்பர் தேவாரத்தில் 'ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்' என்று பாடுகிறார். 'ஆ' என்றால் பசு; 'அஞ்சாடுதல்' என்றால் 'பஞ்சகவ்யத்தால் அபிஷேகம் செய்தல்'. பஞ்சகவ்யம் என்பது பசுவிடமிருந்து உண்டாகும் பால், தயிர், நெய், கோமியம்(பசுவின் ஜலம்), கோமயம்(பசுஞ் சாணம்) என்னும் ஐந்து பொருள்களும் குறிப்பிட்ட விகிதாச்சாரத்தில் சேர்ந்த கலவையே பஞ்சகவ்யம் எனப்படும். இதுதவிர, பாலபிஷேகம், தயிர் அபிஷேகம், நெய்யபிஷேகம் என்று தனித்தனியாகவும் சிவபெருமானுக்குச் செய்வதும் உண்டு. திருவையாறு அருகிலுள்ள தில்லைஸ்தானம் என்னும் தலத்தில் இருக்கும் பெருமானுக்கு நெய்யபிஷேகம் சிறப்பாகும். தில்லைஸ்தானம் என்னும் இத்தலம் தேவாரத்தில் திருநெய்த்தானம் என்று குறிக்கப்பட்டுள்ளது. பஞ்சகவ்யத்தால் சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்வது பசுக்குலத்திற்கே பெருமை என்று அப்பர் குறிப்பிடுகிறார். பால் அபிஷேகத்தை 'கோசிருங்கம்' எனப்படும் பசுக்கொம்பினால் செய்வது மிகுந்த புண்ணியத்தைத் தரும்.

## சாத்வீக உணவு

**சா**துவான பிராணியான பசுவினைத் தெய்வமாகக் கருதி வழிபாடு செய்கிறோம். பசு தன் கன்றுக்கு மட்டுமில்லாமல் மனிதசமுதாயத்திற்கு மகத்தான உணவுப்பொருளாகப் பாலைத் தருகிறது. உணவு வகையில் சாத்வீகம் (சாந்தம்), ராட்சசம்(மிருகம்), தாம்சம் (மந்தம்) என்று மூக்குணங்களை ஏற்படுத்தும் பொருள்கள் உண்டு. இதில் பசுவின் பால் சாத்வீக உணவாகும். பால் பசுவின் ரத்தம் என்பதால் அதுவும் அசைவம் தானே என்ற அபிப்ராயம் கொண்டவர்களும் இருக்கிறார்கள். ஆனால், சாஸ்திரத்தில் பசும்பால் சாத்வீக உணவு என்றே குறிக்கப்பட்டுள்ளது. பாலைக் கொடுப்பதால் பசுவிற்கு ஹிம்சை எதுவும் இல்லை. அது நம் அறிவை துலங்கச் செய்கிறது. பல சாதுக்கள், பசும்பாலை ஆகாரமாகக் கொண்டு உதாரணமாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். மூக்குண உணவுகளைப் பற்றி விவரிக்கும் கீதையை போதித்த கிருஷ்ணர், ஆயர்பாடியில் பாலையும், வெண்ணெயையும் திருடிச் சாப்பிட்ட நவநீதகிருஷ்ணனாக இருந்திருக்கிறார்.

## வெள்ளையைத் தேடி கருப்பு வரும்

**ந**ம் மனம் எல்லாம் வெள்ளை வெளேரென்று பாலினைப் போன்று இருக்க வேண்டும். அப்போது தான் கன்னங்கரேல் என்று இருக்கின்ற கிருஷ்ணன் நம்மை நாடி வருவான். 'கார்வண்ணன்' என்றால் 'மேகம் போன்று கருமையாக இருப்பவன்' என்று பொருள். எவ்வளவு கருமையாக மேகம் வானில் கூடுகிறதோ அதற்கு தகுந்தாற்போல மழை கொட்டும். அதுபோல, கண்ணன் நம் மீது அருள்மழை கொட்டுபவன். அவன் அப்படியே பசும்பாலை எடுத்துக் குடிப்பதில்லை. அது தயிராகி, அதிலிருந்து வெண்ணெய் எடுத்தால் அதை உண்ண விரைந்து வருவான். இதற்கு காரணம் என்ன தெரியுமா?

வெள்ளை மனம் என்னும் பாலை, பக்தி என்னும் நெருப்பு கொண்டு காய்ச்சினால் அது பொங்கும். நெருப்பை அணைத்ததும் பொங்கிய பால் தணிவது போல, மனதின் உணர்ச்சி வேகத்தை அடக்கி, அதில் சாந்தம் என்னும் உறை ஊற்றினால், மனம் தயிர் போல கெட்டியாகி விடும். தயிரை மத்தினால் கடைந்தால் வெண்ணெய் ஊற்றெடுப்பது போல, கெட்டியான மனம் என்னும் தயிரை 'கடவுளைப் பற்றிய ஒருமுகசிந்தனை' என்ற மத்தால் கடைந்தால் 'பூரணத்துவம்' (மனிதனாகப் பிறந்ததே கடவுளை நிரந்தரமாக அடைவது என்ற நோக்கம்) என்ற வெண்ணெய் கிடைக்கும். நம் மனதுக்குள் கிடக்கும் பூரணத்துவம் ஆகிய வெண்ணெயை திருட கருமை நிறமுடைய கண்ணன் வருவான். அவனது அருள் கிடைத்ததும் நாம் அவனுடன் இரண்டற கலந்து விடுவோம்

## நடமாடும் கோயில்

**ப**சு இருக்கும் இடம் புனிதமானது. அதை நடமாடும் கோயில் எனலாம். பூஜையறையில் செய்யும் வழிபாட்டை விட, மாட்டுக்கொட்டிலைத் தினமும் சுத்தம் செய்து, அங்கு அமர்ந்து ஜபம் செய்யும் வழிபாட்டிற்கு கோடி மடங்கு பலனும், புண்ணியமும் கிடைக்கும். பசுவின் உடலில் முப்பத்துமுக்கோடி தேவர்களும் உள்ளனர். சகல புண்ணிய நதிகளும் அதன் உடம்பில் அடங்கியுள்ளனர். அதனால் பசுவே ஒரு நடமாடும் ஆலயம் போன்றதாகும். அங்கு செய்யப்படும் பிரார்த்தனை எல்லா தேவர்களையும் சென்றடையும். லட்சுமி வாசம் செய்யும் தலங்களான சுமங்கலியின் வகிடு, மலர்ந்த தாமரை, யானையின் தலை, வில்வதளம், பசுவின் பிருஷ்டபாகம்(பின்புறம்) ஆகிய ஐந்தில் பசுவிற்கு மிகுந்த மூக்கியத்துவம் உண்டு. காலை வேளையில் பசுக்கள் கிளப்பும் துாசி பட்ட காற்று மிகவும் உன்னதமானது. அதனால் அந்த பிரம்ம மூகூர்த்த வேளையான அதிகாலைப் பொழுதை ''கோதுாளி லக்னம்'' என்று குறிப்பிடுவர். தினபூஜைகள் நடத்தும் போது முதலில் பசுவிற்கு கோபூஜை செய்த பின்பே கஜபூஜை, சிவபூஜைகளைச் செய்ய வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது.





## பசுக்களைப் பாதுகாப்போம்

**ப**சுக்களைப் பாதுகாத்தால் நாட்டில் நன்மை உண்டாகும். பாவங்கள் விலகும். அமைதி பெருகும். உலகில் தர்மம் தழைக்க வேண்டுமானால் பசுக்களைப் பாதுகாப்பது அவசியம். தர்மதேவதையே தவம், துாய்மை, தயை, சத்தியம் என்னும் நான்கு கால்களைக் கொண்ட காளை வடிவில் தான் இருக்கிறது. கலிதோஷம் நீங்கி தர்மம் மீண்டும் உலகில் தலையெடுக்க வேண்டுமானால், கோபால கிருஷ்ணனை வழிபாடு செய்து, பசுக்களுக்கு சேவை செய்ய வேண்டும். மகாபாரதத்தில் பீஷ்மர் எல்லா தர்மங்களையும் தர்மருக்கு உபதேசிக்கும்போது, பசுவின் மகிமைகளைச் சொல்லி, அவற்றைப் பாதுகாக்கும்படி எடுத்துக் கூறுகிறார். பசுவைத் தானமாகக் கொடுப்பது மிகுந்த புண்ணியபலனைத் தருவதாகும். மாபாதகங்கள் தீர்க்கும் மாமருந்து என்றே இதைச் சொல்லலாம். ஆனால், தானம் பெறுபவர் அந்தப் பசுவை இறுதி வரை பாதுகாப்பவரா என்பதை உறுதி செய்தபின் தானம் செய்வது நல்லது. சியவன மகரிஷி பசுக்களைப் பற்றி,''எந்ததேசத்தில் பசுக்கள் தங்களுக்கு இம்சை நேருமோ என்று பயப்படாமல், கோகுலத்தில் நிம்மதியாக மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றனவோ அந்த தேசமே எல்லாப் பாவங்களில் இருந்து விலகி ஒளியுடையதாய் பிரகாசிக்கும்,'' என்று குறிப்பிடுகிறார்.

